**பதுளை- செங்கல்லடி வீதி முன்னேற்றச் செயற்திட்டம் - 2016**

பதுளை- செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் (ஓஎவ்ஐடி) மற்றும் அபிவிருத்திக்கான சவுதி நிதியம் (எஸ்எவ்டி) என்பவற்றிற்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 யூன் 26 மற்றும் 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 1661 பி மற்றும் 10/639 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையினை தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பேராதனிய - பதுளை - செங்கலடி வீதியின் பதுளையிலிருந்து செங்கலடி வரையிலான வீதியின் 147 கிலோமீற்றர்களை புனரமைப்பதன் மூலம் பிராந்தியத்தில் போக்குவரத்தை முன்னேற்றுவதற்குப் பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கும் ஏற்ற வகையில் ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தின் இணைப்பை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,200 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 140 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 15,600 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 120 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தாலும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தாலும் இணைந்து நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. வீதியின் புனரமைப்பு வேலைகள் 2019 மார்ச் அளவில் பூர்தியாக்கப்படுவதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த

சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீகரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க நேரடி கொடுப்பனவுகளுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட மீளளிப்புக்கான விண்ணப்பங்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

வீதி புனரமைப்பு வேலைகள் தொடர்பாக செயந்திட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட ரூபா 13.51 மில்லியன் கூட்டுத்தொகையான காணி சுவீகரிப்பு கிரயங்கள் அளவைக் கிரயங்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்ட மதிப்பீட்டுக் குழுவானது வரிசை அமைச்சின் செயலாளர், திறைசேரியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட அலுவலர்களால் மற்றும் தேசிய திட்டமிடல் மற்றும் வெளிவாரி வளங்கல் திணைக்கள அமைச்சுக்குரிய செயலாளரால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் செயற்திட்ட மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியாளர் ஒருவரையும் உள்ளடக்க வேண்டும். எனினும், செயற்திட்ட மதிப்பீட்டு குழுவானது மேற்கூறப்பட்ட அலுவலர்களை உள்ளடக்கி இருக்காததுடன் மீளாய்வாண்டின் போது 08 தடவைகள் மாத்திரம் அத்தகைய குழுக்களின் கூட்டங்கள் நடைபெற்றிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒடுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2016 திசெம்பர் 31 வரை |
| | யூஎஸ். டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஓஎவ்ஐடி | 60 | 7,800 | - | - | - |
| எஸ்எவ்டி | 60 | 7,800 | 135 | - | - |
| இலங்கை அரசாங்கம் | 20 | 2,600 | 500 | 344.20 | 768.50 |
| | **140** | **18,200** | **635** | **344.20** | **768.50** |

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், புரனமைப்பு வேலைகள் மீதான பௌதீக செயன்முன்னேற்றமானது 33 சதவீதம் தொடக்கம் 53 சதவீதம் வரையிலான வீச்சில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது வீதி புனரமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. காணி சுவீகரிப்பு நடவடிக்கையின் செயன்முன்னேற்றமானது அடையப்படவேண்டிய இலக்குகளைவிட பின்னோக்கியிருந்ததுடன் இது வீதி புனரமைப்பு வேலைகளை அமுல்படுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்தியது.

(ஆ) பிரதான பதவியணியின் பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற ஒட்டுமொத்த விரிவான திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவால், முழுமையாக செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றமானது செயற்திட்ட நோக்கங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் அடையும் நோக்கில் சரியான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் கண்காணித்து மதிப்பிடசெய்ய முடிந்திருக்கவில்லை.

### 3.3. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்பாட்டு சேவைகளை நகர்த்துவதற்காக இலங்கை மின்சார சபை, இலங்கை ரெலிகொம் மற்றும் பைபில் பிரதேச சபை போன்ற ஏனைய அரச நிறுவனங்களிற்கு ரூபா 329.20 மில்லியன் தொகையான கொடுப்பனவுகளை உள்ளடக்கி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 689.05 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அத்தகைய வேலைகள் 2017 மே 31 வரையிலும் உரிய முகவர்களால் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதிப்பிரிவுகளின் பெருக்கு வடிவமைப்பானது அதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடிவமைப்பு அலுவலர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 5.62 மில்லியன் கூட்டுத்தொகையான இடைக்காலக் கொடுப்பனவுகளாக வடிவமைப்பு உத்தியோகத்தர்களால் தெரிவுசெய்யப்பட்ட உப ஒப்பந்தகாரர்களின் பெயர்களில் நேரடியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் 02 பிரதம செயற்திட்ட பணிப்பாளர்கள், செயற்திட்ட இயக்குனர் மற்றும் செயற்திட்ட செயலாளர் பதவிகளை ஆட்சேர்ப்பதற்கு 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.